மாண்புமிகு பேரவைத் தலைவர்:- அடுத்த அலுவல் ஆய்வுக் குழுவிலே இதே பிரச்னையை வைத்து, எல்லாத் தலைவர்களின் அபிப்பிராயங்களையும் கேட்டு ஒரு முடிவை அறிவிக்கிறேன்.

திரு. ரா. உமாநாத்: அந்த 'பிரஸ்' விஷயத்தையும் தயவு செய்து இனிமேல் கவனிக்க வேண்டும்.

தகவல் கோரல்.

(4) உறுப்பினர் கொடுத்துள்ள அறிவிக்கை.

திரு. இரா. கருப்பையா: நான் சொல்ல வேண்டியதைச் சொல்லி விடுகிறேன். நான் ஏற்கனவே ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன். அது மிகவும் முக்கியமான விஷயம். அரிசி கிடைக்கவில்லை, பத்திரிகைகளிலே தகவல் வந்திருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது 54-வது விதியின்கீழ் வருகிறது.

திரு. இரா. கருப்பையா: 55-வது விதியிலே கொடுத்ததை அனுமதிக்காமல், 54-வது விதியின்கீழ் அது எடுக்கப்படுகிறது....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொடுத்துவிட்டு, இங்கே பேசி விட்டால், ஒத்தி வைப்பாகவே எடுத்துக் கொள்ளலாம். என்னுடைய அனுமதி தேவையில்லையே.

நீங்கள் நேற்றே சொன்னீர்கள். ஏற்கனவே கொடுத்தவை பெண்டிங்கில் இருக்கின்றன. இன்றைக்கு 54-வது விதியின்கீழ் இரண்டு எடுத்துக் கொள்கிறேன். (குறுக்கீடு) ஒவ்வொருவரும் முக்கியமானதைத்தான் கொடுக்கிறார்கள். திரு. கருப்பையா அவர்களுக்கு முக்கியமாகப்படுவது மற்றொருவருக்கு முக்கியமாகப் படாமலிருக்கலாம். (குறுக்கீடு) எல்லோரும் மக்களுக்காகத்தான் பாடுபடுகிறார்கள். தனியாக, அவர்களுக்காகக் கேட்கவில்லை. யாரும் தனிப்பட்ட யாருக்காகவும் கேட்கவில்லை. எல்லோரும் பொதுவாக, நாட்டுக்காக, மக்களுக்காக, உழைக்கத்தான் இங்கு வந்திருக்கிறார்கள். இன்றைக்கு வேறு இரண்டு பிரச்னைகள் வந்திருக்கின்றன. உங்களுடையது பின்னால் தான் வரும். அதுவரையில் பொறுத்திருக்க வேண்டும்.

திரு. இரா. கருப்பையா : அந்தத் தீர்மானத்தை உடனே எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்றைக்கு எடுத்துக் கொள்வதற்கில்லையென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: நான் ப்ரொசிஜர் சம்பந்தமாக ஒரு பாயிண்ட் ஆஃப் ஆர்டர் ரெய்ஸ் பண்ண விரும்புகிறேன். இந்த பிரச்னை சம்பந்தமாக, 21–1–81 அன்று நான் ஒரு அவசர ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத்து..

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் கொடுத்தது, 21–1–81 அன்றைக்குத்தான் வந்தது. திரு. இளையபெருமாள் அவர்கள் 20 ஆம் தேதி கொடுத்துவிட்டார். ஆகவே, அவர் பெயர் முதலில் வந்திருக்கிறது. நீங்கள் 21 ஆம் தேதி கொடுத்தீர்கள். ஆகவே, உங்களுடைய பெயர் இரண்டாவது வந்திருக்கிறது.

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: 21 ஆம் தேதி நான் கொடுத்தது நிராகரிக்கப்பட்டு, 23-ஆம் தேதி எனக்குத் தெரிவிக்கப்பட்டது. 21 ஆம் தேதி அவசரப் பொது முக்கியவத்துவம் வாய்ந்த தீர்மானத்தைக் கொடுத்தேன். அலுவலகத்திலே நான் விசாரித்த நேரத்தில் வேறு தீர்மானங்கள் பெண்டிங்காக இல்லை. அது மட்டுமல்ல, இன்றைக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்கள் ஒத்தி வைப்புத் தீர்மானத்தை எடுத்துக் கொள்ளவில்லை. 54-வது விதியின்கீழ் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்ததைத்தான் ஏற்றுக்கொண்டிருக்கிறேன், எடுத்துக் கொள்கிறேன்.

திரு. ரா. உமாநாத்: இரண்டும் ஒரே நேரத்திலே கொடுக்கப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஆமாம், ஒன்றை ஏற்றுக் கொண்டேன், ஒன்றை மறுத்து விட்டேன்.

திரு. ரா. உமாநாத்: நீங்கள் திரு. இளையபெருமாள் 20 ஆம் தேதியே கொடுத்துவிட்டார் என்று சொல்கிறீர்கள் அவர் பேரில் பெர்சனல் ப்ரஜுடிஸ் கிடையாது. We have got a great respect for him. 20 ஆம் தேதி கொடுத்த அந்த மோஷன் மறுக்கப்பட்டது என்று இன்டிமேஷன் போனதற்குப் பிறகு,—நான் இருக்கக்கூடியதைச் சொல்கிறேன்: நீங்கள் கரெக்ட் செய்யுங்கள்—இவர் இரண்டும் கொடுத்த பிறகு, அது கிளப் பண்ணப்பட்டதாகத் தெரிகிறது. If that is the fact 20 ஆம் தேதி கொடுக்கப்பட்டது மறுக்கப்பட்டால், நீங்கள் மறுபடியும் வந்ததை வைத்துப் பார்த்தால், அது செக்கன்டாகத்தான் வரும்.

[முற்பகல் 10.40]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அப்படி அல்ல. என்னுடைய அலுவலகத்தைப் பொறுத்தவரையில்....

திரு. சோ. அழகர்சாமி: பேரவைத் தலைவர் அவர்களே, 55-வது விதியின் கீழ் ஒரு உறுப்பினர் ஒரு தீர்மானத்தைப் பேரவைத் தலைவர் அவர்களிடத்தில் கொடுத்திருந்து, அந்த உறுப்பினர் அனுமதியில்லாமலேயே அது 54-வது விதியின் கீழ் மாற்றப்படுவதால், அந்த உறுப்பினரின் உரிமை பாதிக்கப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்போது திரு கருப்பையாவின் பிரச்சனைக்குள்ளே போகக்கூடாது. திரு கருப்பையாவின் பிரச்சினையில் நான் ஏற்கனவே தீர்ப்பளித்து விட்டேன். திரு. ஹேமச்சந்திரன் அவர்கள் ஒரு பிரச்சினையைக் கிளப்பியிருக்கிறார்கள் அவர் இரண்டிலுமே கொடுத்திருக்கிறார். நான் 55-வது விதியின்கீழ் அவர்கள் கொடுத்திருந்த தீர்மானத்தைத் தள்ளிவிட்டு, 54-வது விதியின் கீழ் கொடுக்கப்பட்டதை எடுத்துக் கொண்டேன். 20 ஆம் தேதியன்றே திரு இளையபெருமாள் அவர்கள் 54-வது விதியின்கீழ் கொடுத்திருக்கிறார். ஆகவே இளையபெருமாளையும் அதில் சேர்த்திருக்கிறேன். திரு. ஹேமச்சந்திரனுக்கு தற்போது இருக்கும் பிரச்சினை இது அவர் தொகுதி என்பதுதான் அவர் தொகுதிக்கு அவர் மிக நன்றாகவே வாதாடுகிறார். அதை நான் பாராட்டுகிறேன்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: தலைவர் அவர்களே, இன்றைக்கு இங்கே மன்றத்திலே வைக்கப்பட்டிருக்கிற அறிக்கையில் என்னுடைய பெயரும், மாண்புமிகு உறுப்பினர் மணி அவர்களுடைய பெயரும் விடப்பட்டு, அதற்குப் பின்னர்தான் சேர்க்கப்பட்டிருக்கிறது. மற்ற மெம்பர்கள் பெயர்கள் எல்லாம் குறை இல்லாமல் சேர்க்கப்பட்டிருக்கிறது. எனவே இதில் something had happened என்று கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது டைப் செய்வதிலே ஏற்பட்ட தவறாகும் அதற்கெல்லாம் பதில் சொல்லிக்கொண்டு இருக்க முடியாது. உங்கள் இருவர் பெயர்களும் அதில் சேர்க்கப்பட்டிருக்கிறது. உங்கள் தொகுதிக்கு நீங்கள் மிக அழகாக வாதாடுகிறீர்கள். நான் அதை ஒத்துக்கொள்கிறேன்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[1981 ஜனவரி 31

திரு. இரா. கருப்பையா: தலைவர் அவர்களே, நான் 55-வது விதியின் கீழ் சபையினுடைய அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும் என்று தீர்மானம் கொடுத்திருந்தேன். அது 54-வது விதியின் கீழ் மாற்றப்பட்டிருப்பதாக பேரவைத் தலைவர் அறிவித்திருக்கிறார். அது 55-வது விதியின் கீழ் இருந்தால் இது சம்பந்தமாக விளக்கங்களைப் பேசுவதற்கு வாய்ப்பிருக்கின்றது. 54-வது விதியில் அந்த வாய்ப்பு பறிக்கப்படுகிறது: ஆகவே இப்படி என்னுடைய உரிமை பறிக்கப்படுவதால் அதை 55-வது விதியின் கீழேயே விவாதிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்படி 55-வது விதியின் கீழ் இருப்பதை 54-வது விதியின் கீழ் மாற்றப்படக்கூடாது என்று உறுப்பினர்கள் விரும்பினால் நான் ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கிறேன். நான் பொது முக்கியத்துவம் கருதி முடிந்த அளவில் தான் நடவடிக்கைகளை எடுக்க முடியும்.

திரு. சோ. அழகர்சாமி: இது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது தான். இந்து பத்திரிகையிலே வந்திருக்கிறது, பையை எடுத்துக் கொண்டு போனார்கள், வெறும் கையை வீசிக்கொண்டு வந்தார்கள் என்று போட்டிருக்கிறார்கள்.

திரு. ரா. உமாநாத்: நல்லவேளையாக பையை எடுத்துப் போனவர்கள், பையையும் விட்டுவிட்டு கையை வீசிக்கொண்டு வந்தார்கள் என்று இல்லாமல் இருக்கிறது,

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நல்லவேளையாக 'இந்துப் பத்திரிகை'யை ஒத்துக் கொண்டு இருக்கிறீர்கள்.

(5). கவன ஈர்ப்புகள்.

(அ) கன்னியாகுமரி மாவட்ட குலசேகரம் காவல் நிலையத்தில் ஒருவர் இறந்தது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 54-வது விதியின் கீழ் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து கவன ஈர்ப்பு. திருவாளர்கள் எல். இளையபெருமாள், ஜே. ஹேமச்சந்திரன், டி. மணி, ப. பொன்னுரங்கம், நா. சுந்தரராஜ், எஸ். ரெத்தினராஜ், பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் ஆகியோர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள்.

திரு. எல். இளையபெருமாள்: தலைவர் அவர்களே, "கன்னியாகுமரி மாவட்டம் குலசேகரம் காவல் நிலையத்தில் 1981 ஆம் ஆண்டு சனவரி திங்கள் 18 ஆம் தேதியன்று இரவு ஏ. ஜே. ராஜ் என்பவர் இறந்தது பற்றிய ''அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்: